# கற்றல் அடைவுகள் சார்ந்த பொதுக் கருத்துகள்

Edit with WPS Office

# அறிமுகம்

- தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பு 2005 மற்றும் குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009 போன்றவை குழந்தைகளுக்குத் தரமான கல்வியினை வழங்குதலை வலியுறுத்துகின்றன.

- இச்சட்டத்தில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு வலியுறுத்தப்பட்டுள்ளது.

- இதன் மூலம் ஆசிரியர்கள் ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட கற்றல் முன்னேற்றத்தினையும் புரிந்துகொள்ள முடிகிறது.

Edit with WPS Office

# கற்றல் அடைவை அறிந்துகொள்ளுதல்

- தற்போது உள்ள சூழ்நிலையில், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமுதாய உறுப்பினர்கள், கல்வித்துறை அலுவலர்கள் அனைவரும் குழந்தைகளின் கற்றல் அடைவைப்பற்றி அறிந்துகொள்ள ஆர்வத்துடன் உள்ளனர்.

- எனவே, எதிர்பார்க்கும் கற்றலை அறியும் வகையில், அவர்களுக்குச் சில அடிப்படை வரன்முறைகள் (Criteria) தேவைப்படுகின்றன.

- கற்றல் தொடர்ச்சியாக நிகழும்போது குழந்தைகள் கற்றுக்கொண்டதை வெளிப்படுத்துதல் ஒரு சவாலாக உள்ளது.

Edit with WPS Office

# கற்றல் விளைவுகள்- முக்கியத்துவம்

- எனவே தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் (NCERT)  தொடக்க, உயர்தொடக்க நிலையில் அனைத்துப் பாடங்களுக்கும் கற்றல் விளைவுகளைத் தயாரித்து வெளியிட்டுள்ளது.

- மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) இக்கட்டகத்தினை தமிழில் மொழிபெயர்த்துள்ளது.

- கற்றல் விளைவுகள், கலைத்திட்ட எதிர்பார்ப்புகள்  மற்றும் கற்பித்தல் செயல்பாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

Edit with WPS Office

# கற்றல் விளைவுகள் முக்கியத்துவம்

- தொடக்க நிலையில் தமிழ்,ஆங்கிலம்,கணக்கு, சூழ்நிலையியல் ஆகிய பாடங்களுக்கும் உயர் தொடக்க நிலையில் தமிழ்,ஆங்கிலம்,கணக்கு , அறிவியல், சமூக அறிவியல் ஆகிய பாடங்களுக்கும் கற்றல் விளைவுகள் வகுப்பு வாரியாக உருவாக்கப்பட்டுள்ளன.

- இக்கற்றல் விளைவுகள் கல்வித்துறை சார்ந்த அனைவருக்கும், மாணவர் கற்றல் அடைவு சார்ந்த பொறுப்பினையும் கடமையுணர்வினையும் உறுதி செய்கிறது.

- இக்கற்றல் விளைவுகளின் அடிப்படையில் மட்டுமே தேசிய அடைவுத்தேர்வுகள் நடத்தப்படவுள்ளன.

Edit with WPS Office

# குறைந்தபட்ச கற்றல் இலக்குகள் – குறைகள்

- இதனையே தேசியக்கல்விக்கொள்கை 1986, மற்றும் செயலாக்கத்திட்டம் (PoA) 1992 குறைந்தபட்ச கற்றல் இலக்குகள் (MLL) வலியுறுத்தியுள்ளன. மேலும் மாணவர்களின் கற்றல் தொடர்ந்து கண்காணிக்கப்படவேண்டும் என்பதும் வலியுறுத்தியுள்ளன.

- குறைந்தபட்ச கற்றல் இலக்குகள் திறன்களை வரையறுத்துள்ளன. இவை கற்றல் அடைவுகளை மையமாக் கொண்டிருந்தன. எனவே இவற்றைக் கொண்டு, மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை மதிப்பிடுதல் கடினமாக் இருந்தது.

Edit with WPS Office

# கற்றல் செயல்பாடுகளுக்கான முக்கியத்துவம்

- தற்போது மாணவர்கள் தாங்களே அறிவினைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. **இந்நிலையில் ஆசிரியர்கள்  கற்றல் நிகழ்வினை ஊக்குவிக்கும் ஏதுவாளர்களாக மாறியுள்ளனர்**. எனவே தற்போது கற்றல் செயல்பாடுகளுக்கு  முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

- **இக்கற்றல் விளைவுகள்  கற்றலின் இறுதி முடிவினை மட்டும் கண்டறியும் கருவியாக மட்டுமில்லாமல் மாணவர்களின் ஆளுமையினை வளர்க்கும் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம்** அளிக்கிறது.

Edit with WPS Office

# கற்றல் விளைவுகளின் முக்கியத்துவம்

- ஒவ்வொரு கலைத்திட்டப் பகுதியிலும் பாடப்பொருள் பற்றிய குறிப்பு, கலைத்திட்ட எதிர்பார்ப்புகள், மாணவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் அடையவேண்டிய, நீண்டகால இலக்குகள் போன்றவை கற்றல் விளைவுகள் கட்டகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

- இக்கற்றல் விளைவுகள் வகுப்பு வாரியாக அமைவதுடன், மாணவர்களின் அடைவுகளை மதிப்பெண் மற்றும் தரம் சார்ந்து அறிந்து கொள்ளும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

- இவற்றின்வழி ஆசிரியர்கள் கொடுக்கப்பட்டுள்ள கற்பித்தல் நிகழ்வுகளைக் கொண்டு கலைத்திட்ட எதிர்பார்ப்புகளின்படி மாணவர்களின் கற்றல் அடைவுகளைப் புரிந்துகொள்ள இயலும்.

Edit with WPS Office

# கற்றல் விளைவுகளைப் பயன்படுத்துதலில் ஆசிரியரின் பொறுப்புகள்

- பள்ளிகளில் கிடைக்கும் வளங்கள் மற்றும் சரியான கற்றல் செயல்பாடுகளைப் பயன்படுத்தி (ஆசிரியர்கள் பல்வேறு கற்பித்தல் சூழல்கள், வாய்ப்புகளை) பல்வேறு நிலையிலுள்ள மாணவர்களுக்கேற்ப உள்ளடங்கிய வகுப்பறையில் கையாளலாம்.
- கற்றல் விளைவுகள்  மற்றும் அவற்றிற்கு எதிரேயுள்ள கற்பித்தல் செயல்பாடுகளை முழுமையாக உற்றுநோக்கி, மேலும் பல செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.
- இக்கற்றல் விளைவுகள் மாணவர்களின் வயதிற்கேற்ப எளிய பகுதிகளிலிருந்து கடினப்பகுதிக்கு முறையாக அமைக்கப்பட்டுள்ளன. எனவே தனியாக ஒரு வகுப்பிற்கான கற்றல் விளைவுகளை மட்டும் கருத்தில் கொள்ளாமல் மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மனதில் கொண்டு பிற வகுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கற்றல் விளைவுகளையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

Edit with WPS Office

# சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான கற்றல் விளைவுகள்


- உள்ளடங்கிய கல்வி என்பது அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் வாய்ப்புகளைச் சிறப்பாக அளிப்பதாகும். சிறப்புக்கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்குத் தேவையான கற்றல் கற்பித்தல் கருவிகளைக் கொண்டு கற்றல் செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

- சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான சிறப்பு வழிகாட்டுதல்கள், சிறப்புக்குழந்தைகளின் கற்றல் தேவைகளை அடையும் வகையில் ஒவ்வொரு பகுதிக்கான கற்றல் விளைவுகளிலும் அளிக்கப்பட்டுள்ளன.

- அதிக அளவில் கற்றல் பிரச்சனைகள் கொண்ட குழந்தைகளுக்கு, தேவைப்படின் கற்றல் விளைவுகளில் நெகிழ்வுத்தன்மையைக் கையாளலாம்.

Edit with WPS Office

# கற்றல் விளைவு




Edit with WPS Office

# கற்றல் விளைவு

- கலைத்திட்ட எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற கற்பித்தல் செயல்பாடுகளை வடிவமைத்து மாணவர்கள், கற்றல் விளைவுகளை அடையச் செய்தல் வேண்டும்.
- வகுப்பறைக் கற்பித்தல் செயல்பாடுகள் சரிவர அமைக்கப்பட வேண்டும்.
- ஒருவரின் தனிப்பட்ட சிந்தனைக்கு மதிப்பளித்து அவரது செயல்பாடுகளின்வழி கற்றல் நோக்கங்களை அடையச் செய்தல்.
- அனைத்துச் செயல்களிலும் தங்கள் அனுபவ அறிவின் அடிப்படையில் கருத்துகளைப் புரிந்துகொள்ள உதவுதல், அதற்கேற்ற வாய்ப்புகளை வழங்குதல்.
- கலைத்திட்டத்தின் நோக்கங்களை அடைவதில் பொருத்தமான கற்றல்முறைகள் இன்றியமையாத பங்காற்ற உள்ளன. ஏற்றதொரு கற்றல் முறையைப் பின்பற்றாமல் விரும்பத்தக்க கற்றல் விளைவுகளை அடைதல் இயலாது.
- **கட்டகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் கற்றல் விளைவுகளைக் கட்டாயம் மாணவர்கள் கைவரப்பெற்றிருக்க வேண்டும். இது போன்ற பல கற்றல் விளைவுகளைப் பாடப்பொருளுக்கு ஏற்ப ஆசிரியர்கள் வரையறுத்துக் கொள்ள வேண்டும் என்பதும் மனத்திற்கொள்ள வேண்டியதாகும்.**

Edit with WPS Office

# எதிர்நோக்கியிருக்கும் சவால்கள்

- இப்பயிற்சியின்வழி நாம் எதிர்பார்க்கும் கற்றல் விளைவு,

- இந்தக் கற்றல் விளைவுகள் வழியாக வகுப்பறைச் செயல்பாடுகள், கலைத்திட்ட எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைப் பாடப்பொருளுடன் இணைத்து வகுப்பறையில்  பெரிய அளவில் மாற்றங்களை ஏற்படுத்திப்  பள்ளிக் குழந்தைகளின் கற்றலை உறுதி செய்ய அனைவரும் இணைந்து செயல்படுதல்.
- தனிப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் சிந்தனையை வெளிப்படுத்தும் வாய்ப்பு வழங்குவதும், சுயசிந்தனைவழி கருத்துகளைப் புரிந்துகொள்ளத்தக்க செயல்பாடுகளை வடிவமைக்கச் செய்வதும், தேவையெனில், தக்க வழிகாட்டுதல்வழி அவர்கள் கருத்தைப் புரிந்துகொள்ள உதவுதலும் ஆகும். இந்நடைமுறை வகுப்பறைக்கும் பொருந்தும். - என்பதைப் புரிந்துகொள்ளல்)

Edit with WPS Office

# கற்றல் விளைவு

- மதிப்பெண் நோக்கித் தள்ளும் மனப்பாட முறையைத் தவிர்த்து, எக்கருத்தையும் சுயமாக மதிப்பிட்டு, ஆய்ந்தறியும் அனுபவ அறிவை வழங்கும் வல்லமை கொண்டகளமாகத் திகழும் வகுப்பறையே நம் குழந்தைகளின் தேவையாக இருக்கிறது.
- அத்தகு வகுப்பறையை உருவாக்கி, ஆளுமை மிக்க சமுதாயத்தைப் படைப்பது ஆசிரியர்கள்தான் எனும் பெருமையினை நிலைநாட்டுவோம். இதற்கு கற்றல் விளைவுகள் வழிகோலாக அமையட்டும்.

❑ நன்றி

Edit with WPS Office